<u>Deposition of Witness</u>

**<u>In the court of the Additional Subordinate Judge, Tenkasi.</u>**

O.S No 387/2019

வா.சா.1 ராமகிருஷ்ணன்

| | | |
|---|---|---|
| Name | : | ராமகிருஷ்ணன் |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Occupation | : | |
| Age | : | |
| Date | : | 02.08.2023 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் வாதி. நான் என்னுடைய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதிலுள்ளது என்னுடைய கையெழுத்து தான். 1941ம் வருடம் செல்லமுத்து தேவர், சங்கரபாண்டியத் தேவருக்கும் மேற்படியாரின் மனைவி சுப்பம்மாளுக்கும் கிரையம் செய்து கொடுத்த கிரைய ஆவணம் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ1. 1942ம் ஆண்டு சங்கரபாண்டியத்தேவர் மற்றும் அவரது மனைவி சுப்பம்மாள் இருவரும் சேர்ந்து சிதம்பர வடிவம்மாளுக்கு கிரையம் கொடுத்த கிரைய ஆவணம் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ2.. 1951ம் வருடம் சுப்பிரமணியத்தேவர் என் பாட்டனரான சங்கிலிமாடப்பத்தேவருக்கு வழக்கு தொகுப்புரை அட்டவணை சொத்தை கிரையம் செய்து கொடுத்த கிரைய ஆவணம் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ3. 25.05.2009ம் தேதியில் என் தகப்பனார் எனக்கு வழக்கு தொகுப்புரை அட்டவணை சொத்து மற்றும் வேறு சொத்தினை பொறுத்து ஏற்பாடு செய்து கொடுத்த ஏற்பாடு ஆவணம் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ4. வழக்குத்தொகுப்புரை அட்டவணை சொத்தின் முன் கிரையதாரர்களின் கொடிவழி வா.சா.ஆ5. ராமலிங்கத்தேவர் மற்றும் சுப்பிரமணியத்தேவர் பெயரில் உள்ள செட்டில்மெண்ட் A ரிஜிஸ்டர் அசல் வா.சா.ஆ6. 1958ம் தேதிய வழக்கு தொகுப்புரை அட்டவணை சொத்தை

சங்கிலி மாடப்ப தேவர் தனது குமாரர் சுப்பிரமணிய தேவருடன் பாகம் செய்து கொண்ட பாக உடன்படிக்கை ஆவணம் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ7. 1951ம் வருடம் கோமதியம்மாளுக்கு கல்யாணியம்மாளுக்குப் பாத்தியப்பட்ட இடத்தை கிரையம் செய்து கொடுத்த கிரைய ஆவணம் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ8. 16.10.1967தேதிய என் தகப்பனார் பெயரில் உள்ள பட்டா அசல் வா.சா.ஆ9. நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ1. நீதிமன்ற ஆணையர் வரைபடம் நீ.ம.சா.ஆ2. பிராது படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)